Tamilisch

# பாடசாலையைப் பற்றிய தகவல்கள்

**புதிதாக வந்த பிள்ளைகளின் பெற்றோருக்கு**

**வணக்கம்**
உங்களுடைய பிள்ளை எங்களிடம் வகுப்பிற்கு வந்ததையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பாடசாலையை ஆரம்பிப்பதை இலகுவாக்குவதற்கு, நாங்கள் உங்களுக்கு முக்கியமான தகவல்களைத் தொகுத்து வைத்திருக்கிறோம். நாங்கள் ஒரு நல்ல ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம், அதோடு மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் செய்வதற்கும் தயாராக இருக்கிறோம். நாங்கள் உங்களுடைய பிள்ளைக்கு ஒரு நல்ல பள்ளிக்காலத்தையும் மேலும் நிச்சயமாக அது எங்களிடம் சந்தோஷமாக இருக்கவும் விரும்புகிறோம்.

வகுப்பாசிரியர் / வகுப்பாசிரியை:

**புதிதாக வருபவர்களை உள் எடுக்கும் வகுப்பு(அவுவ்ஃநாமே வகுப்பு) (முன்னர் சிறிய அளவிலான (கொஞ்சப் பேரைக் கொண்டது) வகுப்பு E) / அங்கு கற்கும் பாடங்கள்**
உள் எடுக்கும் வகுப்பு என்பது ஒரு வகுப்பில் 10 - 14 பிள்ளைகள் இருப்பார்கள், அவர்களுக்கு இன்னும் டொச் தெரியாது. அவர்கள் வழக்கமான வகுப்பில் உள்ளதைப் போன்ற ஒரே பாடங்களைப் படிப்பார்கள். டொச் பாஷை பழகுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அதேநேரம் பிள்ளைகள் சுவிசில் இருக்கின்ற பாடசாலைகளில் ஒவ்வொரு நாள் காரியங்களும் எப்படி இருக்குமென்று தெரிந்து கொள்வார்கள். ஆகக் கூடியது ஒரு வருடத்திற்குள் வசிக்கும் இடத்திலுள்ள ஒரு பாடசாலையின் ஒரு வழக்கமான வகுப்பிற்கு மாற்றம் நிகழும். இது பாடசாலை வருஷத்திற்கு இடையிலும் சாத்தியமாகும்.
பகுதிநேரம் உள் எடுக்கும் வகுப்பிற்கு போகும் பிள்ளைகள் எதிர்கால வழக்கமான வகுப்பிற்கு சில பாடங்களுக்கு போவார்கள். டொச்சை அவர்கள் தீவிரமாக உள் எடுக்கும் வகுப்பில் அல்லது அங்கு கற்கும் பாடங்களில் படிப்பார்கள். வழக்கமான வகுப்பில் மணித்தியாலங்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டு போகும். ஆகக் கூடியது இரண்டு தொடக்கம் மூன்று வருடத்திற்குள் வழக்கமான வகுப்பிற்கு மாற்றுவது முடிவடையும்.

## பாடசாலை முறை

| | | |
|---|---|---|
| **கின்டர் காடன்: கட்டாய பாடசாலை** | | **2 வருடங்கள்** |
| **ஆரம்பப் பாடசாலை: கட்டாய பாடசாலை** | | **6 வருடங்கள்** |
| **கீழ் வகுப்பு:** | **1-3 வகுப்பு** | |
| **மத்திய வகுப்பு:** | **4-6 வகுப்பு** | |
| **மாற்றம்: ஒரு முழுமையான மதிப்பீட்டின் அடிப்படையிலும், ஆசிரியரின் சிபாரிசின் பேரிலும், பெற்றோருடன் பேச்சுவார்த்தை செய்து பிரிக்கப்படும். (கிம்நாசியத்திற்கு: பிரவேச அனுமதிப் பரீட்சை)** | | |
| **செக்குண்டார் வகுப்பு: கட்டாய பாடசாலை (வித்தியாசமான மட்டங்களிலுள்ள வகுப்புகள்)** | | **3 வருடங்கள்** |
| **வேலைக்கான பயிற்சி:**<br>**அல்லது**<br>**நடுநிலைப் பாடசாலை (கிம்நாசியம்):** | | **2-4 வருடங்கள்**<br>**4-6 வருடங்கள்** |

**அதோடு ஒரு ஊக்குவிக்கும் முறையும் இருக்கிறது, விஷேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் பிள்ளைகளின் பிரத்தியேக தேவைகளுக்கு தக்கதாக கற்பிக்கப்படும்.**

## அறிக்கையும் (ரிப்போட்) மதிப்பெண்களும்

**உள் எடுக்கும் வகுப்பில் மதிப்பெண்கள் கொடுக்கப்படுவதில்லை. பாடசாலைக்கு வருகை தருவது அறிக்கையில் போடப்படும். பெற்றோருடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும். பகுதிநேர உள் எடுக்கும் வகுப்புக்களிலும் அங்கு கற்கும் பாடங்களுக்கும் அறிக்கையில் மதிப்பெண்கள் கொடுக்கப்படலாம், டொச்சைத் தவிர.**
**ஒவ்வொரு பிள்ளைக்கும் வருடத்திற்கு இரண்டு தரம் ஒரு அறிக்கை கிடைக்கும் (விளையாட்டு விடுமுறைக்கு முன்பும், கோடைகால விடுமுறைக்கு முன்பும்). மதிப்பெண்களின் அளவு: 1-6 (1 மிகக் குறைவு, 2 குறைவு, 3 திருப்தியில்லை (போதாது), 4 திருப்திகரமானது, 5 நன்று, 6 மிக நன்று). அரைவாசி மதிப்பெண்களும் கொடுக்கப்படும் (உதாரணமாக 4-5, 5-6 போன்றவை). அதோடு வேலைசெய்யும் முறை - படிக்கும் முறை, மேலும் மற்றவர்களுடன் பழகும் முறை போன்றவையும் மதிப்பிடப்படும். முதலாம் வகுப்பில் மதிப்பெண்கள் கொடுக்கப்படுவதில்லை, ஆனால் இரண்டு தடவை பெற்றோருடன் பேச்சுவார்த்தை நடாத்தியது அறிக்கையில் குறிப்பிடப்படும்.**

**போகாமல் விடுவது, விடுமுறைக்கான (லீவு) கோரிக்கை, சமய சம்மந்தமான விடுமுறைகள்**
பாடசாலைக்கு போகாவிடில் பிள்ளை கண்டிப்பாக பாடசாலைக்கு அறிவிக்க வேண்டும். லீவிற்கான கோரிக்கை இரண்டு நாட்களுக்கு மேற்பட்டால் பாடசாலையில் அனுமதி பெற வேண்டும். சமய சம்மந்தபான புனித தினங்களுக்கு லீவுக்கு விண்ணப்பித்தால் கொடுக்கப்படும்.

**பெற்றோருக்கு எந்தச் செலவும் இல்லை.**
பாடசாலைக்குப் போவதும், படிக்கும் பொருட்களும் இலவசமானவை. அதிகமான புத்தகங்கள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும், மற்றவற்றை வைத்திருக்கலாம்.

**நேர அட்டவணை (இத்துடன் சேர்க்கப்பட்டுள்ளதைப் பார்க்கவும்)**
பாடசாலை ஒரு நிலையான நேர அட்டவணையின் படி நடைபெறும். உங்களுடைய பிள்ளை சரியான நேரத்திற்கு வகுப்பிற்கு வருவது முக்கியம். நான்கு நாட்கள் (திங்கள், செவ்வாய், வியாளன், வெள்ளி) காலையிலும், பிற்பகலிலும் வகுப்புக்கள் இருக்கும். புதன் கிழமைகளில் தனிய காலையில் மட்டும் தான் வகுப்புக்கள் இருக்கும். தேவைப்பட்டால் மதிய போசன வேளை பாடசாலையினால் ஒழுங்கு செய்யப்படும்.
பின்வரும் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படும்: டொச், ஆங்கிலம் (2ம் வகுப்பிலிருந்து), கணிதம், மனிதரும் சுற்றாடலும், விளையாட்டு (தேகப்பியாசமும், நீச்சலும்), சங்கீதம், வரைதல், கைவேலையும் கைத்தொழிலும், பிரெஞ்சு (5ம் வகுப்பிலிருந்து), சமயமும் அதோடு கலாச்சாரமும்.
விஷேஷ சம்பவங்களான விளையாட்டு நாட்கள், உல்லாசப் பிரயாணம், வகுப்புடன் சில நாட்கள் செல்லும் பயணம் போன்றவை பிறம்பாக அறிவிக்கப்படும்.

**தாய்ப்பாஷையும் அதோடு கலாச்சாரமும்** (HSK)
தானாக விருப்பப்பட்டு போகும் ஒரு மேலதிக வகுப்பு கிழமைக்கு 2-4 மணித்தியாலங்கள் பிள்ளைகள் அவர்களினுடைய தாய்ப்பாஷையை படிக்கலாம்.

**விளையாட்டு**
தேகப்பியாசத்திற்கான வகுப்பிற்கு பிள்ளைகளுக்கு ஒரு ரி-சேட்டும், ஒரு தேகப்பியாசத்திற்கான காற்சட்டையும் அதோடு தேகப்பியாசம் செய்வதற்கு உபயோகிக்கும் சப்பாத்தும், இவை தனிய தேகப்பியாசம் செய்யும் மண்டபத்திற்குள் மட்டுமே அணியப்படும், நீச்சலுக்கு ஒரு குளிக்கும் உடுப்பு, ஒரு துவாய் அதோடு ஒரு குளிக்கும் போது அணியும் தொப்பியும் (குளிர்

காலத்தில் வீட்டிற்கு போகும் பொழுது அணிவதற்கு ஒரு தொப்பி) தேவைப்படும்.

### வீட்டுவேலை

ஒழுங்காக வீட்டுவேலை இருக்கும், அதை பிள்ளை கவனமாகவும் தன்பாட்டிலும் செய்ய வேண்டும். பெற்றோர்கள் தயவுசெய்து பிள்ளை ஒழுங்காகவும் அமைதியாகவும் வீட்டுவேலை செய்யுமாறு பார்க்க வேண்டும்.

ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையேயுள்ள தொடர்பும், ஒத்துழைப்பும் பெற்றோருக்கு பரஸ்பரம் தொடர்பு வைத்திருப்பதற்காக பாடசாலையில் போய்ப் பார்வையிடும் நாட்கள், பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு மேலும் தனிப்பட்ட பேச்சுவார்த்தைகள் போன்றவை இருக்கின்றன. உங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தால் தயவுசெய்து நீங்கள் பாடசாலைக்கு வரவும்! உங்களுக்கு கேள்விகள் இருந்தால் அல்லது நீங்கள் உங்களுடைய பிள்ளையின் ஆசிரியருடன் ஒரு பேச்சுவார்த்தை செய்ய விரும்பினால், நீங்கள் தயவுசெய்து ஒரு நிர்ணயிக்கப்பட்ட சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யவும். தேவைப்பட்டால் ஒரு ஆளை மொழிபெயர்ப்பாளராக வரவழைக்கலாம்.

### பாடசாலை பல் வைத்தியர்

பாடசாலை பல் வைத்தியர் எல்லாப் பிள்ளைகளிடைய பற்களையும் ஒழுங்காக குறிப்பிட்ட கால இடைவெளியில் சோதிப்பார். பாடசாலையில் பிள்ளைகளுக்கு சரியான முறையில் பற்களைப் பராமரிப்பதற்கு வழி காட்டப்படும்.

### விடுமுறை அட்டவணையும் லீவு நாட்களும்

(சரியான திகதிகளையும் அதோடு மற்ற லீவு நாட்களையும் விடுமுறை அட்டவணையில் பார்க்கவும்)

ஒரு முழு வருடத்தின் 13 கிழமைகள் விடுமுறையும் கீழ் வருமாறு பிரிக்கப்பட்டிருக்கும்:

5 கிழமைகள் கோடைகால விடுமுறை (ஆடி, ஆவணி)
2 கிழமைகள் இலையுதிர்கால விடுமுறை (ஐப்பசி)
2 கிழமைகள் நத்தார் விடுமுறை (மார்கழி கடைசியில்)
2 கிழமைகள் விளையாட்டு விடுமுறை (மாசி)
2 கிழமைகள் வசந்தகால விடுமுறை (சித்திரை)